ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2227/15 - 2021 මැයි මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.05.13

*2227/15 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அதிமேதகு கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால் செய்யப்படும் பணிப்புரை**

(முத்திரை)

**கோட்டாபய ராஜபக்ஷ**

**சனாதிபதியின் பணிப்புரை**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 33 ஆவது உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனக்குரித்தாக்கப் பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி 2021, சனவரி 07 ஆந் திகதி சனாதிபதியின் பணிப்புரையின் மூலம் மக்களுக்கான சட்டதிட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றை எளிதாக்குதல் தொடர்பாக ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாலும்,

அந்த ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்ட பணிகள் மற்றும் கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்டிருந்த கால எல்லை 2021, ஏப்பிறல் 07 ஆந் திகதி முடிவடைந்துள்ளதினாலும்,

மேலும், வெளிப்படைத் தன்மையுடனான செயற்திறன்மிக்க ஊழலற்ற சேவைகளை வழங்குவதற்காக இடையூறாகவுள்ள சட்டதிட்டங்கள், பிரமாணங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் அதற்கான வழிமுறைகளை இலகுபடுத்தி துரிதமாக சேவைகளை வழங்கக்கூடிய பொறிமுறையொன்றை ஸ்தாபிப்பது மிகவும் குறுகிய காலத்திற்குள் மேற்கொள்ளப்பட்டு நிறைவுசெய்யப்பட வேண்டுமென்பதாலும்,

1A - G 34344 — 385 (2021/05)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான் மேற்கூறிய ஆணைக்குழுவின் பணிகளை தகுந்த செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய செயற்றிறனுடன் மேற்கொண்டு நிறைவுசெய்ய வேண்டுமென்பதனால் ஆணைக்குழுவிற்கான கால எல்லையை 2021, ஏப்பிறல் 07 ஆந் திகதி தொடக்கம் மூன்று மாதத்தினால் நீடிக்கின்றேன்.

இரண்டாயிரத்துஇருபத்தோராம் ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

05-459

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.